[1978 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம்:

(அ) நாகர்கோயில் நகருக்குப் போதிய அளவு குடிநீர் அளிக்க ரூ. 87.81 இலட்சம் திருத்திய மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாடு திட்டம் செயல்படுத்தப்பட்டு விரைவாக நடைபெற்று வருகின்றது.

(ஆ) 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் இம்மேம் பாடு திட்டம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். வின்சென்ட்: நாகர்கோவில் நகரத்திற்கு தினசரி குடிநீர் தேவை எவ்வளவு? ரூ. 87.81 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படயிருக்கிற குடிநீர் மேம்பாடு திட்டம் எப்போது முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நாகர்கோவில் நகரின் தினசரி குடிநீர் தேவை நான்கு மில்லியன் காலனாகும். இதில் 1.50 மில்லியன் காலன் தற்சமயம் வழங்கப்படுகிறது. ஆகவே, இன்னும் தேவையுள்ள 2.50 மில்லியன் காலன் இந்தத் திட்டம் முடிவுற்றபின் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் இந்த ஆண்டு 1978 டிசம்பர் திங்களுக்குள் முடிக்க வரையறுக்கப்பட்டுள்ளது.

நாகர்கோயிலில் பாதாளச்சாக்கடை அமைப்புத் திட்டம்.

*810 வினா—திரு.எம். வின்சென்ட்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் நாகர்கோயில் நகரில் (Drainage) பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அத்திட்டம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் இன்னும் இரண்டு மாதங்களில் முடிவுறும். பின்னர் மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அதற்கு அரசின் ஒப்புதல் பெற்று திட்டவேலைகள் துவங்கப்படும்.

திரு. எம். வின்சென்ட்: நாகர்கோவில் நகர பாதாளச் சாக் கடை வடிகால் திட்ட ஆய்வுப்பணியின் மதிப்பு எவ்வளவு? ஆய் வுப்பணி முடிந்து இத்திட்டம் நிறைவேற மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள ரூ, 12,300 ஆகும். ஆய்வுப்பணிகள் இன்னும் இரண்டு மாதங்களில் முடிவடையும். தமிழ்நாடு குடிநீர் வடிகால்

1978 ஏப்ரல் 5]

வாரியம் திட்டத்திற்கு வேண்டிய உத்தேச மதிப்பீட்டைத் தயாரித்து அரசு ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கும். அரசு ஒப்புதலுக்குப்பின் திட்டப் பணிகள் துவங்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: நாகர்கோவில் பாதாளச் சாக்கடைத் திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாகர்கோவிலில் அமைக்கப்படயிருக்கிற பாதாளச்சாக்கடைத் திட்டத்தைப் போலவே தமிழ் நாட்டில் எங்கெங்கு இந்த அரசு பாதாளச் சாக்கடைத் திட்டங்களை அமைக்க இருக்கிறது? இதேபோல் மாயூரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கவேண்டுமென்று கேட்டபோது கேள்வித்தாளில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது, நாகர்கோவிலின் பாதாளச் சாக்கடை அமைப்புத் திட்டம் பற்றிய கேள்வி. நீங்கள் மாயூரம் பற்றிக் கேட்கிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. என். கிட்டப்பா: அப்போது, நான் எப்படிக் கேட்பது.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக்குழுவில் இது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கேள்விகளைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட தொகுதியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு மட்டுமே துணைக்கேள்விகளை கேட்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் தான் உங்களை அனுமதிக்கவில்லை.

திரு. என். கிட்டப்பா: என் கேள்வி அனுமதிக்கப்படவில்லையே, நான் எப்படி கேள்விகளை கேட்பது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை என்னுடைய அறையில் வந்து கேளுங்கள், அதற்கெல்லாம் இப்போது அனுமதிக்க முடியாது. மூலக்கேள்விக்கு சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு மட்டும் தான் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. துரை முருகன்: * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் என்னுடைய அறையில் வந்து கேளுங்கள்.

திரு. துரை முருகன்: * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள், திரு. துரைமுருகன் அவர்கள் பேசியதையெல்லாம் சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று உத்திரவிடுகின்றேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது,